## குயவனே குயவனே

குயவனே குயவனே
படைப்பின் காரணனே
களிமண்ணான என்னையுமே
கண்ணோக்கிப் பார்த்திடுமே

வெறுமையான பாத்திரம் நான்
வெறுத்துத் தள்ளாமலே
நிரம்பிவழியும் பாத்திரமாய்
விளங்கச் செய்திடுமே
வேதத்தில் காணும் பாத்திரம் எல்லாம்
இயேசுவைப் போற்றிடுமே
என்னையும் அவ்விதப் பாத்திரமாய்
வனைந்து கொள்ளுமே

விலைபோகாத பாத்திரம் நான்
விரும்புவாரில்லையே
விலையில்லா உம் கிருபையால்
உகந்ததாக்கிடுமே
தடைகள் யாவும் நீக்கிஎன்னைத்
தம்மைப்போல் மாற்றிடுமே
உடைத்து என்னை உந்தனுக்கே
உடைமையாக்கிடுமே

மண்ணாசையில் நான் மயஞ்கியே
மெய்வழிவிட்டகன்றேன்
கண்போன போக்கைப் பின்பற்றியே
கண்டேனில்லை இன்பமே
காணமற்ப் போன பாத்திரம்,என்னை
தேடிவந்த தெய்வமே
வாழ்நாளெள்லாம் உம் பாதம் செல்லும்
பாதையில் நடத்திடுமே